# Testing and Evaluation Unit,

## Kg/ Sulaimaniya College, Kannattota

க.பொ.த. (உ/த) தரம் 13 நான்காம் தவணைப் பரீட்சை
(23) அரசியல் விஞ்ஞானம் நேரம்: 2 மணித்தியாளங்கள்

---

**வினாத்தாள் I**

அறிவுறுத்தல்கள் :

- இவ்வினாத்தாள் A, B ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டிருப்பதுடன் பகுதி A ஆனது 30 பல்தேர்வு வினாக்களையும் பகுதி B ஆனது 20 குறு வினாக்களையும் கொண்டுள்ளது.
- சகல வினாக்களுக்குமான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுத வேண்டும்
- ஒரு விடைக்கு இரண்டு புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்

**பகுதி A**

01 முதல் 5 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் அவற்றுள் ஒரு கூற்று தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒரு கூற்று பிழையானதாகும். பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

(1) அரசியல் விஞ்ஞானம் கவனம் செலுத்தும் கற்கைகளாவன
1) மக்கள், அரசாங்கம் மற்றும் அரசுகளுக்கிடையிலான தொடர்பு பற்றி கற்கை
2) சமூக அதிகாரத்தின் இயல்பும் அதன் மீதான வரையறைகளின் மூலங்களும்
3) அரசியல் வாதிகளின் சுயவாழ்க்கை விபரங்களை இணைக்கின்றது
4) மக்களின் அரசியல் நடத்தையை கற்கின்றது
5) ஆட்சியாளர்களும், அவர்களின் அதிகார தாபனங்களையும் கற்கின்றது

(...............)

2) அரசியலானது
1) ஜனநாயக வழிமுறையாகவோ, அல்லது ஜனநாயகமல்லாத வழிமுறையாகவோ அமையலாம்
2) அதிகாரப் போராட்டமானது முக்கியம் பெறுவதில்லை
3) பொதுவிவகாரங்கள் தொடர்பாக ஏற்படும் பொதுமைப்படுத்தப்பட்ட தீர்மானங்களின் வெளிப்பாடாகும்
4) யார், எதனை, எப்போது, எவ்வாறு பெற்றுக்கொள்வர் என்பதனை தீர்மானிக்கும் செயன் முறையாகும்
5) அரசியல்வாதிகள், அரசியற்கட்சிகள் என்பன முக்கியம் பெறும் அரசியல் விளையாட்டாகும்.

(...............)

3) நடத்தைவாதமானது
1) பிரித்தானிய அரசியல் விஞ்ஞானிகளால் வளர்த்தெடுக்கப்பட்டது
2) கோட்பாடுகளை முன்னிலைப்படுத்தாமல் அவதானிக்கத்தக்க மனித நடத்தைகளுக்கு முக்கியத்துவம்அளிக்கின்றது
3) 20 ஆம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் அரசியல் விஞ்ஞானத்துடன் இணைந்தது
4) எதிர்வு கூறல்களையும், அனுபவம் சார் கோட்பாடுகளையும் வளர்க்க முயற்சிக்கின்றது
5) விஞ்ஞான ரீதியான அறிவை அபிவிருத்தி செய்ய உறுதிப்படுத்தக்கூடிய விளக்கரீதியானகோட்பாடுகளை முன்னிலைப் படுத்தியது

(...............)

4) அரசு என்பது
1) அரசியல் ரீதியாக ஒழுங்கமைத்த ஒரு சமூகமாகும்
2) இறைமையைப் பெற்ற ஒரே ஸ்தாபனமாகும்
3) அரசியல் விஞ்ஞானத்தின் மையக் கருவாகும்
4) தோற்றம், இயல்பு தொடர்பாக வேறுபட்ட கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றது
5) மக்களின் ஒரு சாராரின் விருப்பினை வெளிப்படுத்தும் கருவியாகும்

(...............)

5) இறைமை அதிகாரம் என்பது
1) அரசினுடைய தனித்துவமான உடமையாகும்
2) அனைத்து சுதந்திரமான அரசியல் சமூகத்திலும் இறைமை உள்ளது
3) ஒழுங்குமுறை எண்ணக்கருப்படுத்தியவர் ஜீன் போடின் ஆவார்
4) தற்கால மக்களாட்சி நாடுகளில் தனிமுதன்மையான மனிதனால் பிரயோகிக்கப்படுகின்றது
5) சட்ட ரீதியான இறைமையை ஜோன் ஒஸ்ரின் ஆதரித்துள்ளார்

(...............)

6) அரசாங்கம் என்பது
1) அரசின் சார்பாக இறைமையை பிரயோகிக்கும் கருவியாகும்
2) அரசின் பொது நலன்களைச் செயற்பாடாக மாற்றும் அரசின்கரமாகும்
3) ஒரே தன்மையுமையவையாக அரசாங்கங்கள் அமைகின்றன
4) அரசையும் மக்களையும் இணைக்கும் கரமாகும்
5) சட்ட, நிறைவேற்று, நீதித்துறைகளைக் கொண்டதாகும்

(...............)

7) தேசிய அரசு முறையானது
1) இன்று வரை ஒரே வகையான ஆட்சி நடைமுறைகளைக் கொண்டுள்ளது
2) 1648 வெஸ்பாலியா உடன்படிக்கை மூலம் அங்கீகரிக்கப்பட்டது
3) ஓர் இனத்திற்கு ஓர் அரசு என்ற அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது
4) திருச்சபையின் வீழ்ச்சியின் மூலம் ஆரம்பமானது
5) சர்வதேச அரசியலின் பிரதான செயற்பாட்டாளர்களாகும்

(...............)

8) சட்டத்துறை என்பது
1) தற்கால மக்களாட்சி நாடுகளில் செல்வாக்கு வீழ்ச்சியடைந்துள்ளது
2) ஒற்றை மன்று அல்லது இருமன்ற முறைகளாக அமையலாம்
3) பிரதிநிதிகளைக் கொண்ட அதிகார ஸ்தாபமாகும்
4) சமூக நிறுவனங்களாலும், அமுக்கக்குழுக்களாலும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்
5) வரவு - செலவுத்திட்டத்தை அங்கீகரிக்கும் ஸ்தாபனமாகும்

(...............)

9) நிறைவேற்றுத்துறை என்பது
1) அரசின் தலைவரையும், அமைச்சர்களையும் கொண்டதாகும்
2) சட்டங்களை உருவாக்கும் பணிகளையும் பொதுவாக மேற்கொள்ளலாம்
3) அரசாங்க மூன்று துறைகளிலும் பிரபல்யமான செயற்பாட்டாளராகும்
4) ஜனநாயக நாடுகளில் வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக்கு தெரியப்படும்
5) அரசாங்கமுறைகளுக்கு ஏற்ப, இதன் கட்டமைப்பு மாற்றமடையும்

(...............)

10) நீதித்துறை என்பது,
1) சட்டங்களுக்கு விளக்கமளிக்கும் தாபனமாகும்
2) அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பாகும்
3) சுயாதீனமாகவும், நடுநிலையாகவும் செயற்படவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது
4) மேனிலை, கீழ்நிலை என இருவகை நீதிமன்றங்களைக் கொண்டமையலாம்
5) சம'டி நாடுகளில் மத்திய மாநில அரசுகளின் சமரசம் செய்யும் பணி இதற்குரியதல்ல

(...............)

11) அரசாங்கத்தின் அதிகாரத்திதைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளாவன,
1) வலுவேறாக்கம்
2) அரசியல் யாப்பு
3) பொலிஸ் மற்றும் சிவில் சேவை
4) நீதிப்புனராய்வு அதிகாரம்
5) எதிர்க்கட்சி

(...............)

12) அரசியல், பொருளாதாரக் கருத்தியல்களின் படி அரசாங்கங்களை வகைப்படுத்தும் முறைகளாவன
1) நவதாரளவாத அரசாங்கங்கள்
2) சில்லோராட்சி அரசாங்கங்கள்
3) தாராள ஜனநாயக அரசாங்கங்கள்
4) சமூக ஜனநாயக அரசாங்கங்கள்
5) சோசலிச அரசாங்கங்கள்

(...............)

13) அரசாங்கத்தின் சில பிரதான பணிகளாவன
1) ஆள்புல ஒருமைப்பாட்டை பாதுகாத்தல்
2) கலாசார மரபுரிமைகளைப் பாதுகாத்தல்
3) வெளிநாட்டு உறவுகளைக் கொண்டு நடாத்துதல்
4) தனியார் துறை நிறுவனங்களின் முகாமைத்துவம்
5) தேசிய கௌரவத்தையும், நலனையும் மேம்படுத்தல்

(...............)

14) ஒற்றையாட்சி அரசாங்கம் என்பது,
1) சிறிய மற்றும் ஒரே இனத்தை கொண்ட அரசுகளுக்குப் பொருந்துகின்றது
2) செலவு குறைந்த சிக்கலற்ற ஒரு முறையாகும்
3) ஒருமைத்தன்மையான சட்ட நிர்வாக முறைகளைக் கொண்டதாகும்
4) அரசாங்கத்தின் கொள்கைகளையும், செயலையும் தெளிவாக இனங்காணல்
5) பலவீனமான ஒரு மத்திய அரசாங்கம் உருவாகலாம்

(...............)

15) சமஸ்டி அரசாங்கம் என்பது
1) மத்தியின் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள உதவும்
2) பெரிய அரசுகளை நிர்வகிக்க ஏற்றமுறையாகும்
3) யாப்பனூடாக அரசாங்க அதிகாரம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும்
4) பிரிந்து செல்லும் எண்ணம் சட்டரீதியாக பிரதிபலிக்கப்படும்
5) பிரதேச மட்டத்தில் செறிந்துள்ள சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க உதவும்

(...............)

14) ஒற்றையாட்சி அரசாங்கம் என்பது,
1) சிறிய மற்றும் ஒரே இனத்தை கொண்ட அரசுகளுக்குப் பொருந்துகின்றது
2) செலவு குறைந்த சிக்கலற்ற ஒரு முறையாகும்
3) ஒருமைத்தன்மையான சட்ட நிர்வாக முறைகளைக் கொண்டதாகும்
4) அரசாங்கத்தின் கொள்கைகளையும், செயலையும் தெளிவாக இனங்காணல்
5) பலவீனமான ஒரு மத்திய அரசாங்கம் உருவாகலாம்

(...............)

15) சமஸ்டி அரசாங்கம் என்பது
1) மத்தியின் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள உதவும்
2) பெரிய அரசுகளை நிர்வகிக்க ஏற்றமுறையாகும்
3) யாப்பனூடாக அரசாங்க அதிகாரம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும்
4) பிரிந்து செல்லும் எண்ணம் சட்டரீதியாக பிரதிபலிக்கப்படும்
5) பிரதேச மட்டத்தில் செறிந்துள்ள சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க உதவும்

(...............)

16) சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களின் பிரதான பண்புகளாவன,
A- காலம் தவறாத நியாயமான தேர்தல்கள்
B- தேர்தல் முடிவுகள் சரியானவையாகவும், வெளிப்படையானதாகவும் அமைய வேண்டும்
C- சுய சிந்தனைப்படி வாக்காளர்களின் தெரிவு
D- அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் மாத்திரம் வாக்களிக்கலாம்
E- பிரசைகள் விரும்பின் தேர்தலில் போட்டியிடும் சுதந்திரம் இருக்க வேண்டும்
1)ABCD 2)BCDE 3)ABDE 4)ACDE 5)ABCE

(...............)

17) மந்திரசபை அரசாங்க முறை என்பது
A- பாராளுமன்றிற்கும், மந்திரிசபைக்குமிடையே நெருங்கிய தொடர்பு காணப்படல்
B- பெயரளவு மற்றும் உண்மை என்ற இரு நிறைவேற்றுப் பகுதிகள் செயற்படல்
C- சிறுபான்மை கட்சிகளும் ஆட்சியில் பங்கெடுக்க சந்தர்ப்பம் ஏற்படலாம்
D- இருகட்சி முறையின் கீழ் சிறப்பாக செயற்பட முடியும்
F- வினைத்திறன் குன்றிய சர்வாதிகார நிர்வாக முறையாகும்
1)ABCD 2)BCDE 3)ABDE 4)ACDE 5)ABCE

(...............)

18) ஜனாதிபதி அரசாங்கமுறை என்பது
A- விரைவான முடிகளும், அரசாங்கத்தின் உறுதிப்பாடும் காணப்படும்
B- அரசியற்கட்சிகளின் செல்வாக்கு கீழ்ப்படுத்தப்படும்
C- சிறப்பான ஜனநாயக ஆட்சிக்கான அடிப்படையாகும்
D- பாராளுமன்றிற்கும், நிறைவேற்றுத்துறைக்குமிடையிலான தொடர்புசேய்மையானதாகும்
E- வலுவேறாக்கத்தின் அடிப்படையில் செயற்படும்
1)ABCD 2)BCDE 3)ABDE 4)ACDE 5)ABCE

(...............)

19) அரசியல் கட்சிகளானவை
A- மக்களையும், அரசாங்கத்தையும் ஒன்றிணைக்கும் ஊடகமாகும்
B- அரசியல் சமுதாயப்படுத்தலின் முகவரல்ல
C- சமூகத்தை முன்கொண்டு செல்லும் பிரதான செயற்பாட்டாளர்களாகும்
D- அதிகாரப் போராட்டத்தில் ஈடுபடுதல் பிரதான நோக்கமாகும்
E- ஜனநாயகமும், கட்சியும் நாணயத்தின் இரு பக்கங்கள் போல
1)ABCD 2)BCDE 3)ABDE 4)ACDE 5)ABCE

(...............)

20) அமுக்கக் குழுக்கள்

A- ஜனநாயக நாடுகளில் சுதந்திரமாகச் செயற்படுகின்றன
B- நலன் பேண் குழுக்கள் எனவும் கூறப்படும்
C- தமது உறுப்பினர்களின் நலன்களுக்காகச் செயற்படும்
D- தேர்தல் காலங்களில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய அமைப்புகளாகும்
E- ஆட்சி அதிகாரத்தைப்பெற, கட்சிகளுடன் இணைந்து செயற்படுகின்றன

1)ABCD 2)BCDE 3)ABDE 4)ACDE 5)ABCE

(...............)

26) பிரித்தானிய குடியேற்ற நாட்டாட்சியின் போது, சமூக விளைவுகளாவன,

A- தேசிய முதலாளித்துவ வர்க்கம் பலவீனமடைந்தமை
B- உயர் குழாம் வகுப்பின் அதிகாரம் தளர்வடைந்தமை
C- சாதிமுறை பலவீனமடைந்தமை
D- ஆங்கில மொழிச் செல்வாக்கால் ஏற்பட்ட சமூக அந்தஸ்து
E- கிராம, நகர இடைவெளி பரவலடைந்தமை

1)ABCD 2)BCDE 3)ABDE 4)ACDE 5)ABCE

(...............)

27) கோல்புரூக்கின் யோசனைகளாவன,

A- இராஜகாரிய முறையினை ஒழித்தல்
B- அரசின் வர்த்தக ஏகபோக உரிமையை ஒழித்தல்
C- இலங்கையர்கள் சிவில் சேவையில் சேர்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கல்
D- தேசாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தல்
E- மலையகம், கரையோரம், தனி நிர்வாக அலகுகளாக இருத்தல்

1)ABCD 2 )BCDE 3)ABDE 4)ACDE 5)ABCE

(...............)

28) கமரனின் யோசனைகளாவன,

A- முழு நாட்டிற்கும் ஒற்றை நீதிமுறையை தாபித்தல்
B- உயர் நீதிமன்றத்தை மாவட்டங்களுக்கு விஸ்தரித்தல்
C- சிவில் நீதிமன்றங்களை தேசாதிபதியின் கட்டுப்பாட்டுலிருந்து விடுவித்தல்
D- உயர் நீதிமன்றத்தை பலப்படுத்தல்
E- எல்லோருக்கும் ஒரே முறைமையான நீதி கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டமையும்,நீதித்துறை சுதந்திரமும்

1)ABCD 2)BCDE 3)ABDE 4)ACDE 5)ABCE

(...............)

29) குறூ - மக்கலம் கோசனைப்படி

A- உத்தியோகப்பற்றற்றோர் அதிகரிக்கப்பட்டனர்
B- வரையறுக்கப்பட்ட வாக்குரிமை அறிமுகம்
C- சட்டசபைக்கு நியமனம் மூலம் 11 பேர் தெரிவாகினர்
D- படித்த இலங்கையர் சார்பாக ஒருவர் தெரியப்பட்டார்
E- தேர்தல் மூலம் 4பேர் தெரிவு செய்யப்பட்டனர்

1)ABCD 2)BCDE 3)ABDE 4)ACDE 5)ABCE

(...............)

30) இலங்கை தேசிய காங்கிரஸ்

A- பொறுப்பரசாங்கத்தை பெறுவதை இலக்காக கொண்டது
B- 1919 இல் உருவாக்கப்பட்டதுஊ-முதலாவது தலைவர் சேர். பொன் இராமநாதன்
D- இன, மொழி, பிராந்திய ரீதியாக பிளவுபட்டது
E- சுதந்திரப் பயணத்தில் சாதாரண மக்களை ஒன்றிணைப்பதில் தோல்வி கண்டது

1)ABCD 2)BCDE 3)ABDE 4)ACDE 5)ABCE

(...............)

- 26 தொடக்கம் 30 வரையிலான ஒவவொரு வினா தொடர்பாகவும் இரு கூற்றுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவுக்குமுரிய சோடிக கூற்றுக்குப் பின்வரும் அட்டவணை 1 இற்கான வழிகாட்டியிலுள்ள 1, 2, 3, 4, 5 என்பவற்றுள் எந்த இலக்கம் அதிகம் பொருந்துகிறது என்பதைத் தெரிவு செய்து அதனிலக்கத்தை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

**அடட்வணை 1 இற்கான வழிகாட்டி**

| **இலக்கம்** | **கூற்று I** | **கூற்று II** |
|---|---|---|
| 1 | உண்மை | உண்மை |
| 2 | உண்மை | பொய் |
| 3 | பொய் | உண்மை |
| 4 | பொய் | பொய் |
| 5 | உண்மை | உண்மையாக இருப்பதோடு முதல் கூற்றை மேலும் விபரிக்கிறது. |

**அடட்வணை I**

| **கூற்று I** | **கூற்று II** |
|---|---|
| 26. கோல்புறூக் சீர்திருத்தங்களின் கீழ் சட்ட நிருபண சபையின் உத்தியோகபற்ற அங்கத்துவர்கள் தேசாதிபதியினால் நியமிக்கப்பட்டனர். | சட்ட நிரூபண சபையில் 9 உத்தியோகபற்றுள்ள அங்கத்துவத்தையும் 8 உத்தியோகபற்றற்ற அங்கத்துவத்தையும் கொண்டிருந்தது. (………….) |
| 27. டொனமூர் சீர்திருத்தங்களின் கீழ் 61 அங்கத்துவர்களைக் கொண்டதொரு அரசாங்க சபை தாபிக்கப்பட்டது. | அரசாங்க சபை 50 தெரிவு செய்யப்பட்ட அங்கத்துவர்களையும் 8 நியமன அங்கத்துவர்களையும் 3 அரசாங்க உத்தியோகத்தர்களையும் கொண்டிருந்தது. (………….) |
| 28. இலங்கையின் தேசிய இயக்கமானது கடைசி வரை ஒரு வெகுசன இயக்கமாகத் தொழிற்பட்டது. | தேசிய இயக்கமானது இலங்கைக்கு பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தை உருவாகுவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டது. (………….) |
| 29. இலங்கையருக்கு கூடுதல் நிருவாக அதிகாரத்தை வழங்கும் பொருட்டு டொனமூர் நிருவாகக் குழு முறை தாபிக்கப்பட்டது. | அரசாங்க உத்தியோகத்தர்களைத் தவிர அரசாங்க சபையின் அனைவரும் 7 நிருவாகக் குழுக்களாகப் பிரிந்து செயற்பட்டனர். (………….) |
| 30. 1935 இல் உருவாக்கப்பட்ட லங்கா சமசமாஜிக் கட்சி இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியாகும். | முதலாளித்துவக் கொள்கையில் அதிக நம்பிக்கை கொண்ட கட்சிகளே தம்மை இடதுசாரிக் கட்சிகள் என அடையாளப்படுத்திக் கொண்டனர். (………….) |

## பகுதி B

31. கல்விசார் முறையில் அரசியல் என்ற எண்ணக்கருவுக்கு இரண்டு பிரதான பொருள்கள் உண்டு. அவற்றைக் குறிப்பிடுக.

(i) ..............................................................................................................................................................

(ii) ..............................................................................................................................................................

32. 'அரசியல் கோட்பாடு' என்ற எண்ணக்கருவுக்கு இரண்டு பொருள்கள் உண்டு. அவ்விரு பொருள்களையும் குறிப்பிடுக.

(i) ..............................................................................................................................................................

(ii) ..............................................................................................................................................................

33. பின்வரும் பண்புகள் பொருந்துகின்ற அரசாங்க முறைகளை முறையே குறிப்பிடுக.

(i) பரம்பரை முறையில் அரசத்துவத்துக்கு உரிமை கோரும் தனிநபர் ஆட்சி

..................................................................................................................................................................

(ii) பொதுமக்களின் பிரதிநிதிகளின் மூலம் கொண்டு நடத்தப்படும் ஆட்சி

..................................................................................................................................................................

34. பின்வரும் பண்புகள் பொருந்துகின்ற அரசியல் கருத்தியல்கள் இரண்டையும் முறையே குறிப்பிடுக.

(i) அரச வழிபாடு

..................................................................................................................................................................

(ii) அரசு பற்றிய வர்க்கமுறை விளக்கம்

..................................................................................................................................................................

35. அரசின் தோற்றம் பற்றிய சமூக ஒப்பந்தக் கோட்பாட்டினை முன்வைத்த ரூசோவின் முதற்கோளின் மூலம் முன்வைக்கப்படும் மூலக்கொள்கைகள் இரண்டும் யாவை?

(i) ..............................................................................................................................................................

(ii) ..............................................................................................................................................................

36. அரைகுறை ஜனாதிபதி முறை சில பண்புகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் இரண்டினைக் குறிப்பிடுக.

(i) ..............................................................................................................................................................

(ii) ..............................................................................................................................................................

37. இலங்கையில் காலனித்துவ நிலைமாற்றங்களில் நிர்ணயமான முறையில் பாதிப்புச் செலுத்திய அரசியல் சீர்திருத்தங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(i) ..............................................................................................................................................................

(ii) ..............................................................................................................................................................

38. 'தேசிய வாதம்' என்ற அரசியல் கருத்தியலானது இரு பிரதான இயல்புகளின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது. அவை யாவை?

(i) ..............................................................................................................................................................

(ii) ..............................................................................................................................................................

39. இந்திய மதச்சார்பின்மை வாதத்தின் இரு பொருள்களையும் குறிப்பிடுக.

(i) ..............................................................................................................................................................

(ii) ..............................................................................................................................................................

40. மோதல்களின் செயற்பாடுகளுக்கு அமைவாக, அவற்றை இரண்டு வகைகளாகப் பிரிக்க முடியும். அவ்விரு வகைகளும் யாவை?

(i) ..............................................................................................................................................................

(ii) ..............................................................................................................................................................

# Testing and Evaluation Unit,
## Kg/ Sulaimaniya College, Kannattota

க.பொ.த. (உ/த) தரம் 13 நான்காம் தவணைப் பரீட்சை

(23) அரசியல் விஞ்ஞானம் II நேரம்: 3 மணித்தியாளங்கள்

---

அறிவுறுத்தல்கள் :

- இவ் வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்.
- பகுதி I இலிருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவையும் பகுதி II இலிருந்து குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையும் பகுதி III இலிருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி I

1. (i) அரசியலுக்கும் அரசறிவியலுக்கும் இடையிலான தொடர்புகள்
   (ii) அரசு, மற்றும் அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புகளும் வேறுபாடுகளும்

(2 X 10 = 20 புள்ளிகள்)

2. அரசியல் விஞ்ஞானத்துக்கான பின்வரும் அணுகுமுறைகளில் எவையேனும் இரண்டினை விபரிக்குக.
   (i) தத்துவார்த்த அணுகுமுறை
   (ii) ஒப்பீட்டு அணுகுமுறை
   (ii) நடத்தைவாத அணுகுமுறை
   (iii) பெண்ணிலைவாத அணுகுமுறை (2 X 10 = 20 புள்ளிகள்)

3. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டினை ஆராய்க.
   (i) நவீன ஆள்புல அரசு
   (ii) நவ தாராளவாத அரசின் பண்புகள்
   (iii) சமதர்ம அரசு
   (iv) பூகோளமயமாக்கம் அரசுகள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம் (2 X 10 = 20 புள்ளிகள்)

4. நிறைவேற்று அதிகாரம் ஒழுங்கமைந்துள்ள விதத்திற்கு ஏற்ப காணப்படும் அரசியலமைப்பு மாதிரிகளின் அடிப்படையில் பின்வருவனவற்றில் இரண்டை விளக்குக
   (i) அமைச்சரவை (மந்திரி சபை) முறை
   (ii) ஜனாதிபதித்துவ முறை
   (iii) கலப்பு முறை
   (iv) அனைத்தாண்மை முறைமை (2 X 10 = 20 புள்ளிகள்)

### பகுதி II

5) பின்வரும் இரண்டினைப் பற்றிக் கருத்துரைக்க.
   i) 1833 கோல்புறூக் - கமரன் சிபார்சுகள்
   ii) 1924 மணிங்டெவன்சயர் சீர்திருத்தின் பிரதான பண்புகள் (2 X 10 = 20 புள்ளிகள்)

6. இலங்கையின் தேசிய இயக்கம் தொடர்பாக பின்வருவனவற்றுள் ஏதாவது இரண்டினை விளக்குக.
   i) சமய மறுமலர்ச்சி இயக்கங்கள்
   ii) தேசிய காங்கிரசின் நோக்கங்கள்
   iii) இடதுசாரி இயக்கம்
   iv) சூரியமல் இயக்கம் (2 X 10 = 20 புள்ளிகள்)

7. டொனமூர் யாப்பின் பின்வரும் ஏற்பாடுகளில் இரண்டினைப் பரிசீலிக்குக.
   i) நிர்வாகக் குழுமுறைமையும் அதன் அனு கூலங்களும் பிரதிகூலங்களும்
   ii) மூன்று அரசாங்க செயலாளர்களின் வகிபங்கு
   iii) சர்வசன வாக்குரிமையின் அனுகூலங்கள்
   iv) தேசாதிபதியின் அதிகாரங்கள் (2 X 10 = 20 புள்ளிகள்)

## பகுதி III

8. மோதல் தொடர்பான வரைவிலக்கணங்களும் வகைப்படுத்தல்களும் (2 X 10 = 20 புள்ளிகள்)

9. மோதல் இணக்கப்பாட்டுச் செயன்முறை தொடர்பான பின்வரும் வழிமுறைகளில் இரண்டை விபரிக்குக.
   i) முன் எச்சரிக்கை செய்தல்
   ii) மோதலை தவிர்த்தல்
   iii) மோதல் முகாமைத்துவம்
   iv) மோதல் நிலை மாற்றம்

(2 X 10 = 20 புள்ளிகள்)

10. பின்வரும் தலைப்புகளுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்புகள் எழுதுக.
   (i) இலங்கையின் அரசியல் கட்சி முறையின் அண்மைக்காலப் போக்குகள்
   (ii) அரசியல் கட்சிகளுக்கும் அமுக்கக் குழுக்களுக்குமிடையிலான வேறுபாடுகள்
   (iii) சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்
   (iv) மக்களுக்குப் பொறுப்புக் கூறல் (2 X 10 = 20 புள்ளிகள்)